## பத்திரிக்கைச் செய்தி

## லஞ்சம் கேட்டு பெற்ற தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு முன்னாள் மேலாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல்

புகார்தாரர் திரு.ரகுலன், திருவாரூர் மாவட்டம் என்பவர் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு, பழநியில் நெல் மூட்டைகளை குடோனிலிருந்து சேமித்து வைத்திருந்தார். குடோனிலிருந்து நெல் மூட்டைகளை எடுக்க நினைத்துள்ளார். திரு.தேவராஜ், மேலாளர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு, பழனி திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் நெல் மூட்டைகளை விடுப்பிப்பதற்காக ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டு கடந்த 05.05.2009ம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டுப் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திண்டுக்கல் பிரிவு அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கானது தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 28.03.2025 தலைமை நீதித்துறை நடுவர் மன்றம் அவர்கள் திரு.தேவராஜ், மேலாளருக்கு குற்ற வழக்கின் சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988க்கு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை மற்றும் அபராதம் ரூ.5,000/-, சட்டப்பிரிவு 13(2)r/w 13 (1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988க்கு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.